**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிம் - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்ச்ல கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாய சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தைத் தவிர்த்து ஆணைக்குழுவின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஆணைக்குழு தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது ஆணைக்குழுவை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு ஆணைக்குழு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியம் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிதியம் தொடர்ந்தியங்குவது தொடர்பான அடிப்படையினை ஈடுபடுத்தும் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எனது முடிவுரைகளானது கணக்காய்வாளரின் அறிக்கைத் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகளின் மீதான அடிப்படையிலானதாகும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் ஆணைக்குழுவின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஆணைக்குழுவின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,
- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுப்பிரிவு கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சம்பந்தப்பட்ட நியமங்களுடனான தொடர்புகளுடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை பிரிவு கணக்கீட்டு நியமம் 07 இன் 65 ஆவது | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் | இலங்கைப் பொதுத்துறை பிரிவு கணக்கீட்டு |

| | | | |
|---|---|---|---|
| | பந்தியின் பிரகாரம் நடைமுறை அல்லாத சொத்துக்களின் ஆக்கபூர்வமான ஆயுட்காலத்தை வருடாந்தம் மீளாய்வுக்குட்படுத்தாததன் காரணமாக ரூபா 67.2 மில்லியன் கிரயமுள்ள வாகனங்கள் உட்பட நிலையான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் மேலும் உபயோகத்திற்கு உட்படுத்தப்பட்டு வருகின்றது. அதன் பிரகாரம் ஏற்பட்டுள்ள மதிப்பிடப்பட்ட பிழையை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் மீள்திருத்தங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக்களின் பெறுமதியை அடையாளங் காண்பதற்கான கொள்கை கிரயத்தை அடிப்படையாக கொண்டதாகும். அதன் பிரகாரம் 07 ஆம் இலக்க நியமம் 41 ஆவது பிரிவின் பிரகாரம் கணக்குகளின் பெறுமதிகள் காண்பிக்கப்படுவதோடு வருடாந்தம் மீள் மதிப்பீட்டை மேற்கொள்ளல் தேவையற்றதாகும். | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | பொதுத்துறை பிரிவு கணக்கீட்டு நியமம் 08 இன் 26 ஆவது பந்தியின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் அறிக்கைப் படுத்தப்பட்டிருந்தது. நிறுவனமொன்றின் அறிக்கையிடும் காலப்பகுதி இறுதியில் அவ் நிதி நிலைமை தொடர்பில் அல்லாமல் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய நிலைமைகள் தொடர்பாக இல்லை என்பதுடன், எதிர்காலத்திலே செயற்பாடுகளுக்கு செலுத்துவதற்கு தேவையான செலவுகளுக்காக ஒதுக்கங்கள் இனங்காணப்படக் கூடாது. எவ்வாறாயினும் அறிக்கையின் திகதியாகும் போது 02 நகர பல்கலைக்கழகங்களுக்காக ஆட்சேர்க்கப்படாத 04 | 2020 திசெம்பர் 31 ஆந் திகதியாகும் போது 09 நகர பல்கலைக் கழங்களுக்காக (City University) சாத்தியவள ஆய்வு அறிக்கையை தயாரிப்பதற்காக ஆலோசகர்கள் மற்றும் பிரதான ஆலோசகர் நியமிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 10 நகர பல்கலைக்கழங்களுக்கான (City University) நிச்சயிக்கப்பட்ட செலவிற்காக அந்த தொகை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் (SLPSAS 01) 01 ஆம் இலக்க 07 ஆவது பிரிவின் பிரகாரம் அட்டுறு செலவொன்றாக கணக்கிடப்பட்டிருந்தது. | ஆட்சேர்க்கப்படாத ஆலோசகர்களுக்காக ஆலோசனைக் கட்டணத்திற்காக ஒதுக்கீடுகள் இணக்கப்படுத்தப்படக் கூடாது. |

ஆலோசகர்களுக்காக ஆலோசனைக் கட்டணமாக ரூபா 4.4 மில்லியன் மீளாய்வாண்டின் இறுதியில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததன் காரணமாக அந்த அளவில் வருடத்தின் மிகை குறைவாகவும் நடைமுறைப் பொறுப்பு கூடுதலாகவும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திறைசேரியின் கொடையாக 2018 ஆம் ஆண்டிலே ஆணைக்குழுவிற்கு உரிமையளிக்கப்பட்டுள்ள ரூபா 4.3 மில்லியன் பெறுமதியான மோட்டார் வாகனத்தின் சாதாரண தொகையை மதிப்பீடு செய்து கணக்கில் உள்ளடக்குவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | பொது திறைசேரியின் கிரயத்தில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவிற்கு பெற்றுக் கொடுக்கப்பட்ட வாகனம் தொடர்பாக கேட்டறிந்து பார்த்து பொருத்தமான வகையில் கிரயத்தை கணக்கிட்டு கணக்கில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | சொத்துக்களின் உரிமை ஆணைக்குழு கையளிக்கப்பட்ட வருடத்திலேயே உரிய சொத்துக்கள் கணக்கில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்குரிய ரூபா 1.8 மில்லியன் செலவுகள் கணக்குகளில் கைவிடப்பட்டிருந்ததன் காரணமாக வருடத்தின் மிகை மற்றும் அட்டுறு செலவுகள் அந்தளவில் முறையே கூடுதலாக மற்றும் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | 2020 வருடத்திற்குரிய அடையாளங்காண முடியாத செலவுகளை அட்டுறு செலவொன்றாக கணக்கிட முடியாததுடன் உரிய கால எல்லைக்குள் இறுதி கணக்குகள் தயாரிக்கப்படும் பொழுது அவ்வாறு அடுத்த வருடத்தின் சனவரி இறுதி வாரத்தில், பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் கிடைக்கப் பெறுகின்ற கொடுப்பனவுகளுக்கு உரிய அட்டுறு செலவுகளாக குறிப்பிடுதல் | வருடத்திற்கு உரிய அட்டுறு செலவுகள் அடையாளங் காணப்பட்டு கணக்கில் உள்ளடக்கப்பட வேண்டும். |

நடைமுறையில் மேற்கொள்ள முடியாத விடயமாகும்.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 29.9 மில்லியன் மிகையாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 12.3 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம நிதி விளைவில் ரூபா 17.6 மில்லியன் விருத்தியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த விருத்திற்கு அரசின் கொடைகள் அதிகரித்தமை பிரதான காரணமாக காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பொருளியலற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை மாணவர்களின் திறமையை மற்றும் அறிவை விருத்தி செய்தல் மற்றும் தலைமைத்துவ பண்புகளினால் நிரம்பப் பெற்ற மாணவர்களை உருவாக்கும் நோக்கத்தில் 2010 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டு யூன் வரையான காலப்பகுதிக்காக ரூபா 452 மில்லியன் தொகையொன்றை தெற்காசிய பல்கலைக்கழகத்தின் உறுப்புரிமை கட்டணமாக ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் இலங்கை மாணவர்களின் திறமையை மற்றும் அறிவை விருத்தி செய்தல் மற்றும் அதனூடாக தலைமைத்துவ பண்புகளினால் நிரம்பப் பெற்ற மாணவர்களை உருவாக்குவதற்கு பங்களிப்பு பெற்றுக் கொடுக்கப்பட்டள்ளதை அவதானிக்க முடியவில்லை. | தெற்காசிய பல்கலைக் கழகத்தின் வருடாந்த அறிக்கைகளை ஆய்வுக்குட்படுத்தி அந்த பல்கலைக்கழகத்தின் ஆய்வு நடவடிக்கைகள் மற்றும் ஏனைய நிர்வாக நடவடிக்கைகள் இடம்பெறுகின்ற முறைகள் தொடர்பாக அறிக்கையொன்றை பெற்றுத் தருமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் உள்ளக கணக்காய்வாளருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | வெளிநாட்டு உயர் கல்வி நிறுவனமொன்றுக்கு நீண்ட காலமாக செலுத்தப்படுகின்ற உறுப்புரிமை கட்டணத்தின் மூலம் இலங்கை மாணவர்களுக்கு கிடைக்கப் பெற வேண்டிய நலன்களை அடைந்து கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை தாமதமின்றி மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பல்கலைக்கழகத்திற்கு மாணவர்களை உள்வாங்கும் போது 2016/2017 கல்வி ஆண்டிலிருந்து 2019/2020 கல்வி ஆண்டு வரை முறையே 897, 738, 2,226 மற்றும் 2,461 என்றவாறு வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அந்த வெற்றிடங்கள் 2021 யூன் 24 ஆந் திகதி வரை நிரப்பப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | ஆட்சேர்க்கப்பட்டு முதலாம் சுற்றின் முடிவில் காணப்பட்ட 5505 வெற்றிடங்களில் மேலும்2,461 வெற்றிடங்கள் காணப்படுகின்றன. | பல்கலைக்கழங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பட்டப்படிப்பு கற்கைநெறிகளுக்கு உள்வாங்க முடியுமான உச்ச மாணவர் எண்ணிக்கையை ஆட்சேர்ப்பதற்கு முகாமைத்துவத்தின் கவனம் தாமதமின்றி செலுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 2019 ஆம் ஆண்டில் இடம்பெற்ற கல்வி பொதுத் தராதர (உயர்தர) பரீட்சையின் பெறுபேறு 2019 திசெம்பர் 27 ஆந் திகதி வெளியிடப்பட்டிருந்த போதிலும் பல்கலைக்கழக அனுமதிக்கான நிகழ்நிலையின் கீழ் விண்ணப்பங்கள் கோரப்படுதல் 02 மாதங்களை விட அதிக காலம் தாமதமாகி 2020 மார்ச் 05 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. மேலும் 2020 ஒக்டோபர் 12 ஆந் திகதி 2020 ஆம் ஆண்டில் கல்வி பொதுத் தராதர (உயர்தர) பரீட்சை ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் அத்திகதிக்கு முன்னர் வெட்டுப்புள்ளியை வெளியிடுவதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தவறியிருந்ததன் காரணமாக பல்கலைக்கழக அனுமதியை இழந்துள்ள மாணவர்களுக்கு | 2019 ஆம் ஆண்டில் கா.பொ.த உயர்தர பரீட்சையை புதிய மற்றும் பழைய பரிந்துரைகளில் இரண்டு தொகுதிக்கும் தனித்தனியாக வெட்டுப்புள்ளிகள் கணிப்பிடுவதற்கு நேர்ந்தமையால் ஏனைய வருடங்களை விட அதிக காலம் செலவானது. | உயர்தரப் பரீட்சை பெறுபேற்றின் அடிப்படையில் வெட்டுப்புள்ளியை எதிர்பார்த்திருக்கும் மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதிக்கான சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தால் மீண்டும் பரீட்சைக்கு தயார்ப்படுத்துவதற்கு சந்தர்ப்பம் கிடைக்கும் வகையில் தாமதமின்றி வெட்டுப் புள்ளியை வெளியிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 2020 ஆம் ஆண்டின் உயர்தரப் பரீட்சைக்கு தயார்ப்படுத்துவதற்கு மற்றும் தோற்றுவதற்கு காணப்பட்ட சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | 2014 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குள் 03 பல்கலைக் கழகங்களுக்காக நிகழ்நிலை முறையின் பிரகாரம் மாணவர்களை உள்வாங்குவதற்கு உரிய கனணி மென்பொருளை நிறுவுவதற்காக மொத்தம் ரூபா 10.2 மில்லியன் முற்பணமொன்று பெற்றுக் கொடுக்கப்பட்டு மீளாய்வாண்டு இறுதியில் 02 வருடங்களில் இருந்து 05 வருடங்கள் வரையான காலமொன்று கடந்திருந்த போதிலும் உரிய வேலைகள் நிறைவு செய்யப்பட்டு முற்பணங்களை தீர்ப்பனவு செய்வதற்கு அறிக்கையிடும் திகதி வரையிலும் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | வருடத்திற்கு வருடம் பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்படும் முறைமையில் ஏற்பட்ட மாற்றங்களை உரிய பல்கலைக்கழகத்தின் மூலம் நாளதுவரையாக்கப் படுவதற்கு நேர்ந்துள்ளதுடன் உரிய வேலைகளை வெற்றிகரமாக நிறைவு செய்ததை உறுதிப்படுத்திக் கொள்ள தாமதமாகியது. இருப்பினும் தற்போது இந்த நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டிருப்பதுடன் உரிய உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொண்டு வேலைகளை நிறைவு செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | உரிய முற்பணங்களை தாமதமின்றி தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.3 செயற்திட்டம் அல்லது மூலதன வேலையின் தாமதங்கள்

---------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பல்கலைக்கழக மற்றும் 12 உயர் கல்வி நிறுவனங்களுக்கு உரிய 20 செயற்திட்ட முன்மொழிவுகளுக்காக அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக் கொடுக்கப்பட்டு 01 வருடத்திலிருந்து 13 வருடங்கள் வரையான காலப்பகுதி கடந்திருந்த | போதுமானளவு செயற்திட்ட ஒதுக்கீடுகள் கிடைக்கப்பெறாமை, நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பொருத்தமான வேலைத் தளமொன்றை கண்டறிவதற்கு வசதி இல்லாமல் இருந்தமை காணியொன்று இருந்த | முன் சாத்தியவள ஆய்வொன்றை மேற்கொண்டு செயற் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் வல்லமையை உறுதி செய்ததன் பிற்பாடு செயற்திட்டங்களுக்கு உரிய பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும் உரிய வேலைத்திட்டங்களின் வேலைகளை ஆரம்பிப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் உரிய உயர்கல்வி நிறுவனம் தவறியிருந்தது. | போதிலும் அந்த இடத்தை தீர்வுகாணும் நடவடிக்கைகள் தாமதமாதல் கொவிட் 19 தொற்று நிலைமை மற்றும் சென்ற வருடங்களின் பாதீட்டு வரையறைகள் காரணமாக புதிய செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவது கைவிடப்படுதல் தாமதத்திற்கு காரணமாகியிருந்தது. | மற்றும் உடன்படிக்கை களுக்கு முற்படல் இடம்பெற வேண்டும். |
| (ஆ) | பல்கலைக்கழகம் மற்றும் 10 உயர்கல்வி நிறுவனங்களுக்கு உரிய செயற்திட்ட முன்மொழிவுகளுக்காக அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக் கொடுக்கப்பட்டு 03 வருடங்களில் இருந்து 11 வருடங்கள் வரையான காலமொன்று கடந்திருந்தாலும் விலைமனு வழங்குதல், தாமதமாதல், வேலையை ஆரம்பித்தல் மற்றும் செயற்திட்டத்தை நிறைவு செய்ய வேண்டிய உரிய காலம் நீடிக்கப்படுதல் ஆகிய காரணங்களினால் 18 செயற்திட்டங்களின் நிதி முன்னேற்றம் நூற்றுக்கு 8 இல் இருந்து நூற்றுக்கு 50 வரையான மிகவும் குறைந்த அளவில் காணப்பட்டது. | 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளினுள் மூலதன நிதியங்களை விடுவித்துக் கொள்வது கீழ் மட்டத்தில் காணப்பட்டமை, ஒப்பந்தக் காரர்களின் பற்றுச்சீட்டுக்களை முறையாக தீர்ப்பதற்கு முடியாதிருத்தல், 2019 ஆம் ஆண்டில் ஏற்பட்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் காரணமாக, பாதுகாப்புக் கருதி மற்றும் 2020 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கொரோனா தொற்றுநிலை காரணமாக ஒப்பந்தக்காரர்களுக்கு செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாமல் போனதும், பௌதீக முன்னேற்றம் கீழ் மட்டத்தில் காணப்படுவதற்கு காரணமாகியிருந்தது. | செயற்திட்ட தாமதத்தை குறைத்துக் கொள்வதற்கு பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொண்டு விரைவாக செயற்திட்டத்தை நிறைவு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 3.4 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 21 ஆவது நூற்றாண்டிற்கு உகந்த வகையில் பல்கலைக்கழக மானியங்கள் | 2020 வருடத்தின் ஆரம்பத்திலிருந்தே காணப்படுகின்ற கொரோனா தொற்று | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தினால் அண்மிப்பதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | ஆணைக்குழுவின் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களின் ஊழியர்களை இலக்காகக் கொண்ட நிதித் தகவல்கள் கட்டமைப்பொன்றை 2020 யூன் மாதமாகும் போது அறிமுகப்படுத்துவதற்கு மீளாய்வாண்டிலே செயல் நடவடிக்கைத் திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் வருட முடிவில் அதன் முன்னேற்றம் நூற்றுக்கு 50 மாத்திரம் காணப்பட்டது. | நிலைமையின் கீழ் இந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் எதிர்பார்க்கப்படுகின்ற செயலாற்றல் மட்டத்தை அண்மிப்பதற்கு தாமதம் ஏற்பட்டது. | எதிர்பார்க்கப்படுகின்ற நோக்கம் மற்றும் இலக்கை நிறைவேற்றிக் கொள்வதற்கு முகாமைத்துவத்தின் அவதானம் செலுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக அதிகாரச் சட்டத்தை மீளாய்வுக்குட்படுத்தி நாளதுவரையாக்கப்படுதல், மாணவர்களை உள்வாங்குவதை விரிவுபடுத்துவதற்காக அரச உயர் கல்விப் பிரிவை மீள் கட்டமைத்தல், மற்றும் நிகழ்கால மற்றும் எதிர்கால உயர் கல்வி தேவைப்பாட்டிற்கு பொருந்தும் வகையில் உயர்கல்வி நிறுவன மீளாய்வு மற்றும் நாளதுவரையாக்குதல் ஆகிய வேலைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு மீளாய்வாண்டிற்குள் எதிர்பார்த்திருந்த போதிலும், வருடம் முடிவடையும் போது அதன் முன்னேற்றம் நூற்றுக்கு 25 போன்ற கீழ் மட்டத்தில் காணப்பட்டது. | 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக அதிகாரச் சட்டத்தின் விசேட வேலைகளை நோக்காகக் கொண்டு பல்கலைக்கழக அதிகாரச் சட்டத்தை திருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. அவ்வாறே காலத்தின் தேவையின் அடிப்படையில் உருவான புதிய ஏற்பாடுகளை உள்ளடக்கும் வகையில் மேற்படி அதிகாரச் சட்டத்திற்கு இப்போதே துறைசார் குழுவொன்றினால் புதிய திருத்தங்கள் உள்ளடக்கப் பட்ட சட்ட வரைபொன்று தயாரிக்கப் பட்டுள்ளது. அதை தயாரிப்பதற்காக உரிய தரப்பினரோடு கலந்துரையாடி கருத்துக்களை பெற்றுக் கொள்வதற்கு மற்றும் முன்மொழியப்பட்ட வரைபை தயாரிப்பதற்கு ஒரு சில காலம் கடந்தமை இந்த தாமதத்திற்கு காரணமாக இருந்தது. | தற்கால வேலைச் சந்தைக்கு பொருந்தக் கூடிய வகையில் உயர் கல்வி நிறுவனங்களின் கற்கை நெறியை மீளாய்வு செய்தல் மற்றும் நாளதுவரை யாக்குதலோடு கூடுதலானோருக்கு உயர் கல்வி சந்தர்ப்பங்கள் கிடைக்கக் கூடிய வகையில் உயர் கல்வி நிறுவன மீள் கட்டமைப்பிற் குட்படுத்தல் மற்றும் சட்ட ஏற்பாடுகளை உருவாக்கிக் கொள்ளுதல் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டும். |